FAIRFIRST INSURANCE LIMITED
(Company No. PB5180)
Access Towers II (14th Floor), No. 278/4, Union Place,
Colombo 02, Sri Lanka.
Tel :011-2428428 Fax : 011-2438438
E-mail: info@fairfirst.lk Website: www.fairfirst.lk

மருத்துவமனையில் தங்கியிருத்தல் ஆதார திட்டம்

விபத்துக் காயங்கள், காப்புறுதிப் பத்திரம் தொடங்கியதன் பின்னர் ஏற்பட்ட திடீர் சுகயீனம் / நோய் அல்லது குறிப்பாக உள்ளடக்கப்படாத சத்திர சிகிச்சையின் காரணமாக அரச அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் அல்லது தாதியர் மருத்துவமனைகளில் உள்வாரியாக நோயாளியாக தங்கியிருத்தலுக்கு கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறை வரை நிச்சயிக்கப்பட்ட பண பயன்பாடொன்றை பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட் வழங்குகின்றது.

காப்பீட்டு விபரங்கள்

* அரச அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் முதல் நாள் இரவை தவிர்த்து, வருடமொன்றுக்கு ஆகவும் கூடியது 30 இரவுகள் தங்கியிருப்பதற்கு காப்பீடு வழங்கப்படும்

1. முன் செலுத்திய & பின் செலுத்திய வாடிக்கையாளர்களுக்கு பயன்பாட்டு வரையறைகள்

1.1 வரையறைகள்
முதல் நாள் இரவை தவிர்த்து, காப்புறுதி வருடமொன்றுக்கு ஆகவும் கூடியது 30 இரவுகள் தங்கியிருப்பதற்கு காப்பீடு வரையறுக்கப்பட்டுள்ளது.

1.2 நாளாந்த கொடுப்பனவுகளும் காப்புறுதிக் கட்டண வரையறைகளும்.

நாளாந்த காப்புறுதிக் கட்டண பயன்பாட்டு அட்டவணைக்கு அனுபந்தம் 01 ஐ உசாவவும்.

1.3 பெறுமதி சேர்க்கப்பட்ட பயன்பாடு - முன் செலுத்திய & பின் செலுத்திய வாடிக்கையாளர்களுக்கு டெங்கு காப்பீடு.

டெங்கு காய்ச்சல் என கண்டறியப்பட்டால், செலுத்தப்படத் தக்க தொகை பின்வருவனவற்றில் எதனையும் விட உயர்ந்ததாகும்.

1. கீழ் குறிப்பிடப்படும் டெங்கு பண வழங்கல் அல்லது
2. பட்டியலிடப்பட்டுள்ள எல்லா பயன்பாட்டு தூண்டல்களை பின்பற்றுவதன் கீழ், அளவீட்டின்படி (அனுபந்தம் 01 ஐ உசாவவும்) தங்கியிருக்கும் காலத்தைப் பொறுத்து சாதாரண பணக் கொடுப்பனவு.

சேவைக் கட்டணம் உட்பட காப்புறுதிக் கட்டணம்	காப்பீடு செய்யப்படும் நாட்கள்	டெங்கு பண வழங்கல்
இரூ 98.25 முதல் 196.50	16 முதல் 30 அல்லது 31 நாட்கள் வரை	இரூ 15,625.00
இரூ 01.25 முதல் 98.25	01 முதல் 15 நாட்கள் வரை	இரூ 7,812.50

1.3.1 பயன்பாட்டு தூண்டல்கள்

- பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் தங்கியிருப்பதற்கு NS1 Antigen பரிசோதனையில் நேர் பெறுபேறு கட்டாயமானதாகும்.
- (NS1 Antigen பரிசோதனை அறிக்கையானது நோயாளியின் பெயர் மற்றும் வயதை உள்ளடக்கியிருக்க வேண்டும்)
- "நேர் பெறுபேற்றை" காட்டும் NS1 Antigen பரிசோதனையின் திகதி, மருத்துவமனைகளில் தங்கியிருக்கும் காலத்திற்குள் இருக்க வேண்டும்
  அல்லது மருத்துவமனைகளில் அனுமதிக்கும் நேரத்துக்கு 72 மணித்தியாலங்கள் முந்தியதாக இருக்கக் கூடாது.
- நோயாளி மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவது கட்டாயமானதாகும்.
- அரச மருத்துவமனைகளில் தங்கியிருப்பதற்கு NS1 அத்தியாவசியமில்லை.

1.3.2 தொற்று நோய் / பெருந் தொற்று காப்பீடு

பெருந் தொற்று மற்றும் தொற்று நோய் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள், 2026 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் கீழ் வருமாறு காப்பீடு செய்யப்படுகின்றன.

107*

படித்தரங்கள்	இரவொன்றுக்கு நாளாந்த கொடுப்பனவு	கழித்த வருடமொன்றுக்கு வரையறை
படித்தரம் 1	இரூ.1,500.00	12,500.00
படித்தரம் 2	இரூ.5,000.00	15,000.00
படித்தரம் 3	இரூ.8,125.00	17,500.00

1.4 முன் செலுத்திய பாவனையாளர்களுக்கு பயன்பாடுகள்

2026 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் பிரயோகமாகும் காப்புறுதிக் கட்டணங்கள்

சேவைக் கட்டணம் உட்பட காப்புறுதிக் கட்டணம் (வரிகள் நீக்கி)					
உற்பத்தி படித்தரம்	பிரதான காப்புறுதி ஒன்றுக்கு	வாழ்க்கைத் துணை ஒன்றுக்கு	பிள்ளை ஒன்றுக்கு	கழித்த இரவொன்றுக்கு நாளாந்த கொடுப்பனவு	வருடாந்த வரையறை
அடிப்படை	இரூ.196.50	இரூ.129.03	இரூ. 99.25	இரூ.1,500.00	இரூ.45,000.00
வெள்ளி	இரூ.548.38	இரூ.364.23	இரூ.288.18	இரூ.5,000.00	இரூ.150,000.00
தங்கம்	இரூ.853.03	இரூ.570.68	இரூ.457.31	இரூ.8,125.00	இரூ.243,750.00

2 பதிவு நடைமுறை

2.1 பதிவு செய்வதற்கு #107*1# BIMA Lanka Insurance Brokers (Pvt) Ltd ஐ அழுத்தவும். வாடிக்கையாளர் அவசர இலக்கம் 1343 க்கு தொடர்பு கொள்ளவும்.

2.2 பதிவை உறுதி செய்து கொள்வதற்கு #107*1# குறியீட்டை அழுத்துவதனால், வரவேற்பு குறுந்தகவலொன்றை பெறுவீர்கள்.

2.3 முன் செலுத்திய வாடிக்கையாளர்களின் தொலைபேசியிலிருந்து நாளாந்த கழிவு மூலமும், வாடிக்கையாளர் பின் செலுத்துதல் தொடர்பைக் கொண்டிருப்பவராயின் மாதாந்தமும் செலுத்துப்படலாம்.

2.4 மருத்துவமனையிலிருந்து வெளியேறியவுடன், வாடிக்கையாளர் உதவி இலக்கம் 1343 ஊடாக அழைக்கலாம். முகவரொருவர் வாடிக்கையாளருக்கு உதவி செய்வார்.

2.5 வாடிக்கையாளரின் காப்புறதிக் கோரிக்கை வங்கி வைப்பீட்டினூடாக செலுத்தப்படும், வங்கிக் கணக்கொன்று இல்லாதவிடத்து, சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படுவதன் பேரில், காப்புறுதி பெறுனரின் சார்பாக காசோலையொன்றின் ஊடாக செலுத்தப்படும்.

3. பொது காப்புறுதி நிபந்தனைகளும் வரப்பிரசாதங்களும்

3.1 பூகோள பிரதேசம்

இக்காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் வழங்கப்படும் சகல பயன்பாடுகளும், இலங்கையின் பூகோள பிரதேசத்தினுள் மருத்துவமனையில் தங்கியிருப்பதற்கு மட்டுமே பிரயோகமாகும்.

3.2 காப்புறுதிப் பத்திர தொடக்கமும் புதுப்பித்தலும்

இக்காப்புறுதிப் பத்திரத்துக்கான கழித்தல்கள் உடனடியாக ஆரம்பிக்கும். காப்பீடானது அடுத்த மாத முதலாம் திகதி தொடக்கம் செயற்படும். ஆரம்ப திகதியிலிருந்து மூன்று (3) மாத காத்திருப்பு காலம் (2023 மார்ச் 20 இலிருந்து) பிரயோகமாகும். காப்பீட்டு தொகையானது கழித்தல்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும் – இதன் விபரங்கள் அனுபந்தம் 01 இல் காணப்படுகின்றது. எனவே, இக்காப்புறுதிப் பத்திரமானது, அப்போது நிலவும் விகிதத்தில் மாதாந்தம் புதுப்பிக்கப்படலாம்.

3.3 வயதெல்லை

3.3.1 2023 மார்ச் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் பதிவு செய்த அங்கத்தினருக்கு வயதெல்லை.

- பதிவின் போது ஆகவும் குறைந்த வயது – 18 வருடங்கள்
- பதிவின் போது ஆகவும் கூடிய வயது – 65 வருடங்கள்
- காப்பீடு முடிவுறும் வயது – 65 வருடங்கள்.

3.3.2 2023 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின் பதிவு செய்த அங்கத்தினருக்கு வயதெல்லை.

- பதிவின் போது ஆகவும் குறைந்த வயது – 18 வருடங்கள்
- பதிவின் போது ஆகவும் கூடிய வயது – 60 வருடங்கள்
- காப்பீடு முடிவுறும் வயது – 65 வருடங்கள்.

3.4 **தகைமையும் பதிவு செய்தலும்**

காப்புறுதி பெறுனர் (2023 மார்ச் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னிருந்து அமுலாகும்) பதினெட்டு (18) வயதுக்கும் அறுபத்தைந்து (65) வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது (2023 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து அமுலாகும்) பதினெட்டு (18) வயதுக்கும் அறுபது (60) வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். கம்பெனியினால் ஏற்றக் கொள்ளப்படின், பதிவு செய்யப்படும் நேரத்தில் சந்தாதாரர் இலக்கத்தினூடாக இக்காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் காப்பீடு செய்யப்படும்.

3.5 **காப்புறுதி கட்டணம் செலுத்தல்**

காப்புறுதி பெறுனர் பகுதி 1.3 மற்றும் 1.4 இற்கிணங்க வரிகளுடன் சேர்த்து காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். அங்கத்தினர் ஒரு மாதத்துக்கு செலுத்தாவிடில், செலுத்துகை கம்பெனிக்கு கிடைக்கப் பெற்ற பின் மூன்று (3) மாத காத்திருப்பு காலம் பிரயோகமாகும்.- 2023 மார்ச் 20 முதல் அமுலாகும்.

3.6 **தனி நபர் காப்புறதி முடிவுறுதல்**

கீழ்வரும் ஆகவும் முந்திய சந்தர்ப்பத்தில் காப்புறுதி காப்பீடானது சுயமாக முடிவுறும்

3.6.1 காப்புறுதிப் பெறுனர் 65 வயதை கடத்தல் அல்லது

3.6.2 மரணித்தல்

3.6.3 காப்புறுதிப் பெறுனருடனான ஒப்பந்த / தொடர்பு டயலொக்கினால் சந்தா இரத்துச் செய்யப்படல் அல்லது வாபஸ் பெறப்படல் அல்லது

3.6.4 தனி நபர் காப்புறுதிக் கட்டணத்தை செலுத்தாமை.

3,7 **அறிவித்தல்**

கம்பெனிக்கான எல்லா அறிவித்தல்களும் தொடர்பாடல்களும் எழுத்து மூலமாக கம்பெனியின் விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். அவருடைய / அவளுடைய சந்தா இலக்கதினூடாக BIMA Lanka Insurance Brokers (Pvt) Ltd இனால் காப்புறுதிப் பெறுனர் தொடர்பு கொள்ளப்படுவார்.

3.8 **மாற்றங்கள்**

எழுத்து மூலமான 30 நாள் முன்னறிவித்தலை காப்புறுதிப் பெறுனரின் கடைசியாக அறியப்பட்ட விலாசத்துக்கு சாதாரண தபாலில் அனுப்புவதனாலோ அல்லது அவருக்கு குறுந்தகவல் அனுப்புவதனாலோ இந்த காப்புறுதிப் பத்திரத்தின நியதிகள், ஏற்பாடுகளை மாற்றும் உரிமையை கம்பெனி கொண்டுள்ளது.

3.9 **சான்றுப்படுத்தல், தகவல் சான்று**

கம்பெனியினால் கோரப்படும் எல்லா சான்றிதழ்கள், தகவல்கள் மற்றும் சான்றுகளையும், கம்பெனிக்கு தேவைப்படும் விதத்தில், அவருடைய செலவில் காப்புறுதிப் பெறுனர் சமர்ப்பிக்க வேண்டும்.

3.10 **தவறான முன்வைத்தல் / முறைகேடு**

ஏதும் கோரிக்கை முறைகேடானதென கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது அதற்கு ஆதாரமாக போலியான வெளிப்பாடுகள் அல்லது கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தால், இதில் ஏதாவதொரு நிலைமையில், காப்பீட்டை இரத்துச் செய்யும் உரிமையை கம்பெனி கொண்டுள்ளது.

3.11 **செலுத்துகை நாணயம்**

காப்புறுதிப் பெறுனருக்கும், கம்பெனிக்குமான சகல செலுத்துகைகளும் இலங்கை ரூபாவிலாகும்.

3.12 **காப்புறுதிப் பெறுனர் எவரினதும் கருத்தொன்றிய போலி கூற்றுக்கள்**

காப்புறுதிப் பெறுனர் எவரிகனதும் தகவல்களை மறைத்தல் அல்லது தவறாக முன்வைத்தலின் போது, அந்நபரின் மருத்துவமனையில் தங்கியிருத்தல் ஆதார திட்ட காப்புறுதிப் பத்திரம் இரத்தாகும்.

3.13 **கைமாற்றுதலின்மை**

இக்காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மருத்துவமனையில் தங்கியிருத்தல் ஆதார காப்புறுதி கைமாற்றப்பட முடியாததாகும். டெங்கு பண வழங்கல் காப்புறுதிப் பெறுனருக்கு மட்டுமே கிடைக்கப் பெறுவதோடு, கைமாற்றப்பட முடியாதாகும்.

3.14 **விடுகைகள்**

பின்வருனவற்றுக்கான மருத்துவமனையில் தங்கியிருப்பதற்காக எதனையும் செலுத்துவதற்கு கம்பெனி பொறுப்புடையதல்ல.

3.14.1 கர்பச் சிக்கல்கள், பிள்ளை பேறு அல்லது குடும்பக் கட்டுப்பாடு என்பன பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 09 மாதங்களுக்கு தொடரச்சியாக செலுத்தப்பட்டதன் பின்பே காப்பீடு செய்யப்படும்.

3.14.2 அழகியல் சிகிச்சைகளும் / சத்திர சிகிச்சைகளும்

3.14.3 எல்லா சந்தாதாரர்களுக்கும் 2023.மார்ச் 20 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் முன்னிருந்த நோய்கள்.

3.14.4 எல்லா சந்தாதாரர்களுக்கும் 2023.செப்டம்பர் 1 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் ஆயுர்வேத சிகிச்சைகள்.

3.14.5 எல்லா சந்தாதாரர்களுக்கும் 2023.செப்டம்பர் 1 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் முதல் நாள் இரவு தங்கியிருத்தல்.

3.15 **இரத்தாக்கல்**

காப்புறுதிப் பெறுனருக்கு அறிவிப்பதன் மூலமும், கடைசியாக செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணத்தை BIMA Lanka Insurance Brokers (Pvt) Ltd ஊடாக செலுத்துவதன் மூலமும் முழுமையாகவோ அல்லது யாரும் காப்புறுதி பெறுனருடைய இக்காப்புறுதியோ எந்நேரத்திலும் கம்பெனியினால் இரத்துச் செய்யப்படலாம். காப்புறுதி செய்யப்பட்ட நபர் 60 நாட்களுக்குக் கூடுதலாக காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்தவில்லையாயின் அவள் / அவர் சுயமாகவே முடிவுறுத்தப்படுவார்.

அதே விதமாக கம்பெனிக்கு அறிவிப்பதன் மூலம் இக்காப்புறுதி எந்நேரத்திலும் காப்புறுதிப் பெறுனரினால் இரத்துச் செய்யப்படலாம். அந்நிலையில், காப்புறுதி அமுலில் இருந்த காலப் பகுதிக்கான காப்புறுதிக் கட்டணத்தை தக்க வைத்துக் கொள்ளும். காப்புறுதி நடைமுறையிலிருந்த காலப் பகுதியில் ஏதும் கோரிக்கைக்காக கம்பெனியினால் செலுத்தப்பட்டிருந்தால், காப்புறுதியைக் கொண்டிருப்பவருக்கு / காப்புறுதி பெறுனருக்கு ஏதும் காப்புறுதிக் கட்டணம் மீளச் செலுத்த வேண்டியிருக்காது.

3.16 **சட்டம் மற்றும் தகராறு தீர்த்தல் பத்தி**

ஏதும் மீறல்கள் உட்பட, இந்த ஒப்பந்தத்தினால் அல்லது அது தொடர்பாக ஏதும் தகராறு, கோரிக்கை, கேள்வி அல்லது முரண்பாடு தோன்றினால், அவ்விடயத்தை சமரசமாக தீர்த்துக் கொள்வதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வதற்கு இரு தரப்பினரும் இணங்குகின்றனர். கருத்தறிதல், நன்னம்பிக்கையுடன் கலந்தாலோசித்தல், அவர்களுடைய உரிமைகளை புரிந்து கொள்ளல் மற்றும் https://www.fairfirst.lk/customer-complaints/ என்ற வலையமைப்பில் கிடைக்கப் பெறும் கம்பெனியின் முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல் நடைமுறையின் ஊடாக நியாயமானதும் திருப்திகரமானதுமான தீர்வை பெற்றுக் கொள்ளல் என்பன இதிலங்கும்.

தகராறு தோன்றி அறுபது (60) நாட்களுக்குள் தீர்வு காண தரப்பினருக்கு இயலாது போனால், விடமானது எழுத்து மூலமாக மற்ற தரப்புக்கு அறிவித்தலின் பேரில்,

- இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரிக்கு,
- இலங்கை காப்புறுதி சீராக்கல் ஆணையகம் (IRCSL) க்கு அல்லது
- இலங்கையில் நடுவர் தீர்ப்பு சம்பந்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகளின்படி நடுவர் தீர்ப்புக்கு முன்வைக்கலாம்.

அத்தோடு, தகைமையான நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றம் ஒன்றினூடாகவும் விடயத்தை தீர்த்துக் கொள்வதையும் தரப்பினர் தெரிவு செய்யலாம். இந்த உடன்படிக்கையானது, விடயம் சம்பந்தப்பட்ட இலங்கையின் சட்டப்படி ஆளப்படுவதுடன், வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்.

4. வரைவிலக்கணங்கள்

4.1 **விபத்து அல்லது எதேச்சையான சம்பவங்கள்** என்பது, அடையாளங் காணத்தக்க நேரத்திலும் இடத்திலும் வேறெந்த காரணியில் இருந்தும் சுயாதீனமானாக காயமொன்றுக்கு வழிவகுக்கும் திடீர், கருத்தொன்றிக்காத, எதிர்பாராத, வழமைக்கு மாற்றமான மற்றும் குறிப்பான சம்பவம் என அர்த்தப்படும்.

4.2 **வருடாந்த வரையறை** என்பது, காப்புறுதியின் ஆரம்ப தொடக்கத்தில் இருந்து ஒரு வருடத்துக்குள் மருத்துவமனையில் தங்கியிருப்பதற்காக காப்புறுதிப் பெறுனருக்குக் கிடைக்கப் பெறும் ஆகவும் கூடிய வரையறை என அர்த்தப்படும்.

4.3 **பற் சிகிச்சை** என்பது, மேலதிக விசேடத்துவத்துடன் அல்லது அல்லாமலும் ஆரம்ப B.D.S. (பற் சத்திர சிகிச்சை பட்டதாரி) பட்டதாரியினால் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை என அர்த்தப்படும்.

4.4 **நோய்** என்பது, வழமையான ஆரோக்கிய நிலைமையில் இருந்தும் நோயினால் அடையாளங் காணப்படும் மாற்றமாக உடல் நிலை என அர்த்தப்படும்.

4.5 **சுகயீனம்** என்பது, விபத்தின் காரணமாக ஏற்படாததும், நேரிடைகாய கண்டறியக் கூடியதுமான காப்புறுதிப் பெறுனரின் நோய் நிலைமை அல்லது உடல் அங்கங்களின் வழமைக்கு மாற்றமான செயற்பாடு என அர்த்தப்படும்.

4.6 **காயம்** என்பது, விபத்தொன்றினால் மட்டுமே ஏற்படுத்தப்பட்ட உடற் சேதம் என அர்த்தப்படும்.

4.7 **சத்திர சிகிச்சை** என்பது, பின்வருவனவற்றில் ஏதுமொரு வைத்திய செயன்முறை – பற் சிகிச்சைக்கா அல்லாது, ஏதும் உடல் அங்கமொன்றை அல்லது பாகமொன்றை திருத்தம் செய்வதற்காக, மீளமைப்பதற்காக அல்லது அல்லது புனருத்தாரணம் செய்ளவதற்காக கீறுதல் என அர்த்தப்படும்.

4.8 **மருத்துவமனை** என்பது, நோயுற்ற மற்றும் காயமுற்ற நபர்களை பராமரிப்பதற்காக மருத்துவமனை என முறையாக அமையப் பெற்றதும், சுகாதார சேவைகள் மற்றும் போஷாக்கு அமைச்சில் பதிவு செய்யப்பட்டதும், நோய்க் கண்டறிதலுக்கும் பிரதான சத்திர சிகிச்சைக்கும் வசதிகளைக் கொண்டதும், பதிவு செய்யப்பட்ட மற்றும் பட்டதாரி தாதிகளினால் 24 மணி நேர தாதியர் சேவை வழங்குவதுமான நிறுவனம் என அர்த்தப்படும்.

4.9 **மருத்துவமனையில் தங்கியிருத்தல் ஆதார திட்ட காப்புறுதிப் பத்திரம்** என்பது, இக்காப்புறுதிப் பத்திரமானது, இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் உடன்பாடுகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் காப்பீடு வழங்கும் என அர்த்தப்படும். இக்காப்புறுதிப் பத்திரமானது, எதிர் வரும் மாதத்துக்கு காப்பீடு வழங்கும் தினசரி செலுத்தும் உற்பத்தியொன்றாகும்.

4.10 **மருத்துவமனையில் தங்கியிருத்தல்** என்பது, ஆரம்ப வெளிநோயாளர், நாள் சத்திர சிகிச்சை அல்லது ETU சிகிச்சையைத் தொடர்ந்து விசேட வைத்தியரொருவரின் கண்காணிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட நோயாளியாக மருத்துமனையில் அனுமதிக்கப்படுதலும் தங்கியிருத்தலும் என அர்த்தப்படும்.

4.11 **உள்வாரி நோயாளி** என்பது, நோய்க்காகவும் காயமொன்றுக்காகவும் முழு நேர வைத்திய கவனிப்பையும் கண்காணிப்பையும் நாடி இரவு முழுவதும் மருத்துவமனையில் தங்கியிருக்கும் நபர் என அர்த்தப்படும்.

4.12 **காப்புறுதி பெறுனர் / நீங்கள் / உங்களது** என்பது, டயலொக் தொடர்பைக் கொண்டுள்ளவரும், இந்த உடன்படிக்கைக்கு இணங்க அல்லது டயலொக் தொடர்பைக்

கொண்டுள்ளவரின் நெருங்கி குடும்ப அங்கத்தினர் அவரின் , அவளின் சார்பாக காப்புறுதித் திட்டமொன்றில் (மருத்துவமனையில் தங்கியிருத்தல் ஆதார திட்ட காப்புறுதிப் பத்திரத்தில்) பங்குபற்றும் மற்றும் இலத்திரனியல் பதிவு செய்யும் படிவத்தை பூரணப்படுத்தியவரும் மற்றும் பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவரும் என அர்த்தப்படும்.

4.13 **காப்புறுதி ஆண்டு** என்பது, காப்புறுதிப் பத்திர திகதியில் இருந்து தொடங்கி அடுத்த வருடப் பூர்த்தியில் முடிவடையும் பன்னிரண்டு (12) மாத காலவிடை என அர்த்தப்படும்..

4.14 **காப்புறுதிக் கட்டணம்** என்பது, மருத்துவமனையில் தங்கியிருத்தல் ஆதார திட்ட காப்புறுதிப் பத்திரத்துக்காக காப்புறுதிப் பத்திர பெறுனரினால், காப்புறுதி வழங்குனருக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் என அர்த்தப்படும்.

4.15 **காப்பீட்டின் சாராம்சம்** என்பது, மருத்துவமனையில் தங்கியிருத்தல் ஆதார திட்ட காப்புறுதிப் பத்திரத்திரம் பற்றி ஒவ்வொரு காப்புறுதிப் பெறுனருக்கும் **BIMA Lanka Insurance Brokers (Pvt) Ltd** இனால் வழங்கப்பட வேண்டிய சரியான தகவல்கள் என அர்த்தப்படும். இத்தகவல்கள், காப்புறுதிப் பெறுனரினால் நன்கு விளங்கிக் கொள்ளப்பட வேண்டிய காப்புறுதிப் பத்திரத்தின் ஏற்பாடுகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி சுருக்கமாக விபரிக்க வேண்டும். காப்பீட்டின் சாராம்சத்தின் பதங்கள் **பயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்டினால்** தயாரிக்கப்பட்டனவாகும்.

4.16 **பதிவுத் திகதி** என்பது, காப்புறுதிப் பெறுனரின் காப்பீடு அமுலாகும் திகதியாகும் என அர்த்தப்படும்.

4.17 **காப்பீட்டு மட்டம்** என்பது, 1.2 மற்றும் 1.4 பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காப்புறுதிக் கட்டண மட்டத்திற்கும் பொருந்தக்கூடிய நாளாந்தக் கொடுப்பனவைக் குறிக்கும்.

4.18 **காப்பீட்டு வழங்குனர் அல்லது கம்பெனி** என்பது, பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட் என அர்த்தப்படும்.

4.19 **BIMA Lanka Insurance Brokers (Pvt) Ltd** என்பது, கம்பெனிக்கும் காப்புறுதி பெறுனருக்கும் இடையில் தொழில்நுட்ப ஒருங்கிணைப்புக்கு வசதி செய்யும் சேவை வழங்குனர் என அர்த்தப்படும்.

4.20 **முன்னிருந்த நிலைமைகள்** என்பது,

அ) காப்புறுதிப் பத்திரம் தொடங்குவதற்கு முன்னதாக சிகிச்சை அல்லது மருந்து அல்லது ஆலோசனை அல்லது நோய்க் கண்டிறிதல் வேண்டப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது உங்களால் அல்லது காப்புறுதிப் பெறுனரால் எதிர்பார்க்கப்பட்ட

அல்லது

ஆ) காப்புறுதிப் பத்திரம் தொடங்குவதற்கு முன்னதாக இருந்ததாக உங்களால் அல்லது காப்புறுதிப் பெறுனரால் அறியப்பட்டிருந்த சிகிச்சை அல்லது மருந்து அல்லது ஆலோசனை அல்லது நோய்க் கண்டிறிதல் வேண்டப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட
ஏதும் காயம், சுகயீனம், இருதய வலி அல்லது நிலைமை, புற்று நோய், சிறுநீரக நோய் மற்றும் பாரிசவாதம் என அர்த்தப்படும்.

5. நாம் எவ்வாறு தனிப்பட்ட தகவல்களை பயன்படுத்துகின்றோம்?

பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்டில் நாம், எமது வாடிக்கையாளர்கள், கோரிக்கையாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு ஒப்பந்தங்களின் இரகசியத் தன்மையை பாதுகாப்பதில் ஈடுபாடு கொண்டுள்ளோம். நாம் சேகரிக்கும் தனிப்பட்ட தகவல்கள், தொடர்பு விபரங்கள், நிதி மற்றும் கணக்கு தகவல்கள், கடன் விபரங்கள், வைத்திய அல்லது ஆரோக்கிய தரவுகள் (அவசியப்படும் போது உங்களது சம்மதத்தோடு) மற்றும் எம்முடனான தொடர்பின் போது வழங்கப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட வேறேதும் தகவல்கள் என்பன நாம் சேகரிக்கும் தனிப்பட்ட தகவல்களில் உள்ளடங்கலாம்.

உங்களது தனிப்பட்ட தகவல்கள் பின்வரும் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம்.

- தொடர்பாடல்கள், கோரிக்கைகளைக் கையாள்தல் மற்றும் செலுத்துகைகள் உட்பட காப்புறுதியின் நிர்வாகம்.
- காப்புறுதி நியதிகள் மற்றும் கோரிக்கை செலுத்துகைகள் சம்பந்தமாக மதிப்பீடு செய்தல் மற்றும் தீர்மானித்தல்.
- ஊழல், பணச் சலவை மற்றும் ஏனைய குற்றச் செயல்கள் என்பனவற்றை தடுத்தல், கண்டுபிடித்தல் மற்றும் விசாரணை.
- சட்டபூர்வ உரிமைகளை நிறுவுதலும் எதிர்காத்தலும்.
- சட்டபூர்வ மற்றும் சீராக்கல் கடமைப்பாடுகளுக்கு இணங்குதல்.
- தர நிர்னயத்துக்காக தொலைபேசி அழைப்புக்களை கண்காணித்தல் மற்றும் பதிவிடல், பயிற்சி மற்றும் பாதுகாப்பு.
- சந்தை ஆய்வு மற்றும் ஆராய்வு.

இந்தக் காரணங்களுக்காக, எமது குழும நிறுவனங்களுடனும், காப்புறுதி தரகர்களுடனும், மீள் காப்புறுதியாளர்களுடனும், சுகாதார பராமரிப்பாளர்களுடனும் மற்றும் சேவை வழங்குனர்களுடனும் உங்களுடைய தகவல்கள் பகிரப்படலாம். சட்டத்தினால் அவசியப்பட்டால், அரச அதிகாரிகளுக்கு அல்லது வேறும் மூன்றாம் தரப்பினருக்கு தகவல்கள் வெளிப்படுத்தப்படலாம். ஊழலைத் தடுப்பதற்கு அல்லது கோரிக்கை சரிதையை வலுப்படுத்துவதற்குமாக தனிப்பட்ட தகவல்கள் கைத்தொழில் சார் கோரிக்கை பதிவுகளில் பதிவிடப்படலாம்.

6. கோரிக்கை செயன்முறை –

6.1 கோரிக்கை சமர்ப்பன கால வரையறை –

6.1.1 மருத்துவமனையிலிருந்தும் வெளியேறி 90 நாட்களுக்குள் மருத்துவமனையில் இருக்கும் கோரிக்கைகள் எல்லாவற்றையும் சமர்ப்பிக்கவும். கோரிக்கையின் போது தாமதத்தையும் பிரச்சினைகளையும் தவிர்ப்பதற்கு கால நேரத்தில் சமர்ப்பிப்பது அத்தியாவசியமாகும்.

6.2 **கோரிக்கை கையாள்கை**

6.2.1 வெளியேறியதன் பின் அறிவித்தல் - மருத்துவமனையிலிருந்தும் வெளியேறிய உடன், BIMA Lanka Insurance Brokers (Pvt) Ltd இன் வாடிக்கையாளர் துணை இலக்கம் 1343 ஐ அழைத்து அவர்களூடாக காப்புறுதி வழங்குனருக்கு அறிவிக்க வேண்டும்.

6.2.2 முகவரின் உதவி – கோரிக்கை மற்றும் வழிகாட்டல் தொடர்பாக வாடிக்கையாளர் துணை முகவரொருவர் வாடிக்கையாளருக்கு உதவி செய்வார். இந்த உதவி மு.ப. 8.00 முதல் பி.ப. 5.00 கிடைக்கும்.

6.2.3 கோரிக்கை நிரூபனம் – கோரிக்கையை ஆதாரப்படுத்துவதற்காக, மருத்துவமனையில் தங்கியிருந்ததற்கான காரணத்தையும், சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் வழங்கவும். அவசியப்படும் சகல ஆவணங்களும் கிடைக்கப் பெற்று மூன்று வேலை நாட்களுக்குள் கோரிக்கைகள் கையாளப்படும்.

6.2.4 நாளாந்த கொடுப்பனவு – செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டண மட்டத்தைப் பொறுத்து, மருத்துவமனையில் தங்கியிருக்கும் காலத்தில் நாளாந்த கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும். இந்தக் கொடுப்பனவானது, ஆகவும் கூடிய வருடாந்த வரையறைக்கு உட்பட்டதாகும்.

6.2.5 BIMA கோரிக்கை அறிவிப்பு – வாடிக்கையாளரின் காப்புறுதிக் கட்டண கழிவுகளை அடிப்படையாகக் கொண்டு BIMA அழைப்பு நிலையம் கோரிக்கை செயன்முறையை ஆரம்பிக்கும்.

6.2.6 விசேட நிலைமைகளில் கையாள்கை நேர விஸ்தரிப்பு – தகராறு அல்லது விசேட சூழ்நிலைகளின் போது கோரிக்கை கையாள்கை பத்து நாட்கள் வரை நீடிக்கலாம்.

6.2.7 BIMA இனால் ஆவணங்கள் சேகரித்தல் – அவசியமான ஆவணங்கள் எல்லாவற்றையும் சேகரிப்பதற்கும், அவை பூரணமானவையென உறுதிப்படுத்துவதற்கும், BIMA வாடிக்கையாளருடன் ஒன்றிணைந்து செயற்படும்.

6.2.8 பயார்பஸ்ட் இன்சூரன்ஸுக்கு சமர்ப்பனம் – இறுதி கையாள்கைக்காக சகல ஆவணங்களையும் BIMA பயார்பஸ்ட்டுக்கு சமர்ப்பிக்கும்.

6.2.9 கோரிக்கை செலுத்தல் அறிவிப்பு – கோரிக்கை செலுத்தப்பட்டதன் பின், பயார்பஸ்ட் BIMA வுக்கு அறிவிக்கும். அதன் பின்னர், கோரிக்கையின் நிலை பற்றி BIMA வாடிக்கையாளருக்கு அறியப்படுத்தும்.

6.3 **கோரிக்கை வரையறைகள்**

6.3.1 டெங்கு பண வழங்கல் – காப்புறுதிப் பெறுனர் ஒருவருக்கு வருடமொன்றுக்கு ஒரேயொரு டெங்கு பண வழங்கல் மட்டும் செலுத்தப்படும்.

6.4 **ஆவண தேவைப்பாடுகள்**

6.4.1 கோரப்படும் தகவல்கள் – அவசியப்படும் சகல அத்தாட்சிப் பத்திரங்கள், தகவல்கள் மற்றும் ஆதார சான்றுகள் என்பவற்றை, அவற்றைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் செலவை ஏற்று, நீங்கள் வழங்க வேண்டும்.

6.5 **கோரிக்கை ஆவணங்கள்**

கோரிக்கை செயன்முறையை தொடங்குவதற்கு, பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்கவும்.

6.5.1. **பொது ஆவணங்கள் –**

- பூரணப்படுத்தப்பட்ட கோரிக்கை படிவம்.
- மருத்துவமனையில் இருந்து நோய் பரிசோதனை அட்டை.
- அடையாள உறுதி (உ+ம். அடையாள அட்டை)
- காப்புறுதி பதிவு உறுதி.

6.5.2 **குறிப்பான கோரிக்கைகளுக்கு மேலதிக ஆவணங்கள்**

- டெங்கு பண வழங்கல் – NSI antigen Report அல்லது அரச நிறுவனத்திடமிருந்து உத்தியோகபூர்வ நோய் பரிசோதனை உறுதிப்பாடு.
- நோய் தொற்று / பெருந் தொற்று காப்பீடு (உ+ம்) கொவிட் – 19 - நோய் பரிசோதனை அட்டை, PCR / Antigen test report மற்றும் அடையாள உறுதி.

***குறிப்பு** – கோரிக்கை செயற்பாட்டை இலகுவாக தொடங்குவதற்காக, சகல ஆவணங்களும் பூரணமானவையாகவும் சரியானவையாகவும் இருத்தல் வேண்டும்.*

7. உங்களுடைய முறைப்பாடுகளும் இன்னல்களும்

உங்களுக்கு உச்ச திருப்தியை அளிக்குமுகமாக உங்களுடைய கோரிக்கைகளை முறையாக நிறைவேற்றுவதில் நாம் ஈடுபாடு கொண்டுள்ளோம். எனினும், எமது சேவைகள் பற்றி நீங்கள் அரிதாக திருப்தி கொள்ளாத விடத்து, உங்களுடைய கரிசனைகள் கவனத்திற் கொள்ளப்படுவதை உறுதி செய்ய நாம் நாடுகின்றோம். தயவு செய்து பின்வரும் விதத்தில் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

- தனிப்பட்ட முறையில் – நீங்கள் மிக அண்மையிலுள்ள பயார்பஸ்ட் கிளைக்கு விஜயம் செயது கிளை முகாமையாளருடன் கதைக்கலாம். மாற்றமாக நீங்கள் எமது தலைமையகத்துக்கு விஜயம் செய்து, உங்களது விடயம் பற்றி வாடிக்கையாளர் முறைப்பாட்டு அதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம்.

- தபால் மூலம் – உங்களது முறைப்பாடுகளை எழுத்து மூலமாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும் - வாடிக்கையாளர் முறைப்பாட்டு அதிகாரி,

பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட், எக்சஸ் கோபுரம் 11 (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02.

- தொலைபேசி ஊடாக – வாடிக்கையாளர் முறைப்பாட்டு அதிகாரி, + 94 11 242 8282. எமது தொலைபேசி தொடர்புகள் தினசரி முப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை செயற்படும்.

வாடிக்கையாளர் சேவை நோக்கங்களுக்காக, உங்களுடைய தொலைபேசி அழைப்புக்கள், உங்களது தேவைகளை நன்கு விளங்கிக் கொள்வதற்காகவும், உங்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காகவும் ஒலிப்பதிவு செய்யப்படலாம் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

அனுபந்தம் I

அ. வெற்றிகரமாக கழிக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை

ஆ. அடுத்து வரம் மாதக் காப்பீடு

ஜனவரி		பெப்ரவரி		*பெப்ரவரி லீப் வருடம்		மார்ச்		ஏப்ரல்		மே		ஜூன்		ஜூலை		ஆகஸ்ட்		செப்டம்பர்		அக்டோபர்		நவம்பர்		டிசம்பர்	
அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ
31	1,500	28	1,500	29	1,500	31	1,500	30	1,500	31	1,500	30	1,500	31	1,500	31	1,500	30	1,500	31	1,500	30	1,500	31	1,500
30	1,451	27	1,446	28	1,449	30	1,451	29	1,450	30	1,451	29	1,450	30	1,451	30	1,451	29	1,450	30	1,451	29	1,450	30	1,451
29	1,404	26	1,393	27	1,396	29	1,404	28	1,400	29	1,404	28	1,400	29	1,404	29	1,404	28	1,400	29	1,404	28	1,400	29	1,404
28	1,355	25	1,339	26	1,345	28	1,355	27	1,350	28	1,355	27	1,350	28	1,355	28	1,355	27	1,350	28	1,355	27	1,350	28	1,355
27	1,306	24	1,286	25	1,293	27	1,306	26	1,300	27	1,306	26	1,300	27	1,306	27	1,306	26	1,300	27	1,306	26	1,300	27	1,306
26	1,258	23	1,233	24	1,241	26	1,258	25	1,250	26	1,258	25	1,250	26	1,258	26	1,258	25	1,250	26	1,258	25	1,250	26	1,258
25	1,210	22	1,179	23	1,190	25	1,210	24	1,200	25	1,210	24	1,200	25	1,210	25	1,210	24	1,200	25	1,210	24	1,200	25	1,210
24	1,161	21	1,125	22	1,138	24	1,161	23	1,150	24	1,161	23	1,150	24	1,161	24	1,161	23	1,150	24	1,161	23	1,150	24	1,161
23	1,113	20	1,071	21	1,086	23	1,113	22	1,100	23	1,113	22	1,100	23	1,113	23	1,113	22	1,100	23	1,113	22	1,100	23	1,113
22	1,065	19	1,018	20	1,035	22	1,065	21	1,050	22	1,065	21	1,050	22	1,065	22	1,065	21	1,050	22	1,065	21	1,050	22	1,065
21	1,016	18	964	19	983	21	1,016	20	1,000	21	1,016	20	1,000	21	1,016	21	1,016	20	1,000	21	1,016	20	1,000	21	1,016
20	968	17	911	18	931	20	968	19	950	20	968	19	950	20	968	20	968	19	950	20	968	19	950	20	968
19	919	16	858	17	879	19	919	18	900	19	919	18	900	19	919	19	919	18	900	19	919	18	900	19	919
18	871	15	804	16	828	18	871	17	850	18	871	17	850	18	871	18	871	17	850	18	871	17	850	18	871
17	823	14	750	15	776	17	823	16	800	17	823	16	800	17	823	17	823	16	800	17	823	16	800	17	823
16	774	13	696	14	724	16	774	15	750	16	774	15	750	16	774	16	774	15	750	16	774	15	750	16	774
15	726	12	643	13	673	15	726	14	700	15	726	14	700	15	726	15	726	14	700	15	726	14	700	15	726
14	678	11	589	12	621	14	678	13	650	14	678	13	650	14	678	14	678	13	650	14	678	13	650	14	678
13	629	10	536	11	569	13	629	12	600	13	629	12	600	13	629	13	629	12	600	13	629	12	600	13	629
12	581	9	483	10	518	12	581	11	550	12	581	11	550	12	581	12	581	11	550	12	581	11	550	12	581
11	533	8	429	9	465	11	533	10	500	11	533	10	500	11	533	11	533	10	500	11	533	10	500	11	533
10	484	7	375	8	414	10	484	9	450	10	484	9	450	10	484	10	484	9	450	10	484	9	450	10	484
9	435	6	321	7	363	9	435	8	400	9	435	8	400	9	435	9	435	8	400	9	435	8	400	9	435
8	388	5	268	6	310	8	388	7	350	8	388	7	350	8	388	8	388	7	350	8	388	7	350	8	388
7	339	4	225	5	259	7	339	6	300	7	339	6	300	7	339	7	339	6	300	7	339	6	300	7	339
6	290	3	225	4	225	6	290	5	250	6	290	5	250	6	290	6	290	5	250	6	290	5	250	6	290
5	243	2	225	3	225	5	243	4	225	5	243	4	225	5	243	5	243	4	225	5	243	4	225	5	243
4	225	1	225	2	225	4	225	3	225	4	225	3	225	4	225	4	225	3	225	4	225	3	225	4	225
3	225	0	0	1	225	3	225	2	225	3	225	2	225	3	225	3	225	2	225	3	225	2	225	3	225
2	225	0	0	0	0	2	225	1	225	2	225	1	225	2	225	2	225	1	225	2	225	1	225	2	225
1	225	0	0	0	0	1	225	0	0	1	225	0	0	1	225	1	225	0	0	1	225	0	0	1	225